பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

15 05 2024 **WEDNESDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கான ஐந்து, ஆறு மற்றும் ஏழாம் கட்ட தேர்தல்களுக்கான அரசியல் கட்சி தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

2. தொலைபேசி வழியே போலியாக வரும் அழைப்புகளை நம்பி, மக்கள் யாரும் ஏமாற வேண்டாம் என்று மத்திய தொலைத்தொடர்பு துறை அறிவுறுத்தியுள்ளது.

3. சூரியனில் ஏற்பட்ட கதிர் வெடிப்பை ஆதித்யா எல்.1 விண்கலம் படம் எடுத்து அனுப்பியுள்ளளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

4. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள், பேட்டரிகள், சூரியமின் உபகரணங்கள் மீது கடும் இறக்குமதி வரியை அமெரிக்க அரசு விதித்துள்ளது.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், ராஜஸ்தான் இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது..

**>>>>><<<<<**

மக்களவைக்கான ஐந்து, ஆறு மற்றும் ஏழாம் கட்ட தேர்தல்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

ஐந்தாம் கட்ட தேர்தல் வரும் 20ஆம் தேதியும், ஆறாம் கட்ட தேர்தல் 25ஆம் தேதியும், ஏழாவது மற்றும் இறுதிகட்ட தேர்தல் ஜுன் 1ஆம் தேதியும் நடைபெறவுள்ளது.

பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி மஹாராஷ்ட்டிர மாநிலத்தில் இன்று **Dindori** மற்றும் **Kalyan** ஆகிய இடங்களில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

இன்று மாலை மும்பையில் நடைபெறும் பிரச்சாரப் பேரணியில் அவர் பங்கேற்கவுள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. ராகுல் காந்தி இன்று ஒடிசா மாநிலத்தில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

**Bolangir-**ல் நடைபெறும் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அவர் உரையாற்றுகிறார்.

**>>>>><<<<<**

காவல்துறை, சிபிஐ, போதைப்பொருள் தடுப்பு பிரிவு, ரிசர்வ் வங்கி, அமலாக்கத்துறை, சட்ட அமலாக்கப் பிரிவு ஆகிய பெயர்களில் போலியாக தொலைபேசி மூலம் மக்களை அழைத்து, மிரட்டி பணம்

பெறும் முயற்சியில் ஈடுபடுபவர்கள் குறித்து, தேசிய இணையதள குற்றப்பிரிவு இணையதளத்திற்கு தகவல் தெரிவிக்குமாறு உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

அரசு அதிகாரிகள் பேசுவது போல பேசி மிரட்டி, பணம் பறிப்பது, மின்னணு தளங்களில் உள்ள கணக்கை நீக்கப்போவதாக கூறுவது மற்றும் நேரடியாக கைது நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக தெரிவிப்பது ஆகியவை குறித்து உடனடியாக உள்ளூர் காவல்துறை மற்றும் தேசிய இணையதள குற்றப்பிரிவுக்கு தகவல் தெரிவிக்குமாறு உள்துறை அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>><<<<<

போலியாக வரும் அழைப்புகளை நம்பி, மக்கள் யாரும் ஏமாற வேண்டாம் என்று மத்திய தொலைத்தொடர்பு துறையும் அறிவுறுத்தியுள்ளது.

போலியாக வரும் அழைப்புகளில் சில தகவல்களை கூறியும், உங்களுடைய கைபேசி எண் உடனடியாக நிறுத்தப்படும் என்று தெரிவித்தும், புதிய எண் ஒன்றுக்கு மீண்டும் அழைப்பு விடுக்க வேண்டும் என்றும், உங்கள் கைபேசி எண்ணை தக்க வைத்துக் கொள்வதற்கு இது உதவும் என்று போலியாக பல அழைப்புகள் வருவதால் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும், வாட்ஸ்ஆப் மூலமாக வெளிநாடுகளிலிருந்து வரும் அழைப்புகளையும் ஏற்க வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதிரியான அழைப்புகள் வந்தால் உடனடியாக 1 9 3 0 என்ற எண்ணிற்கு புகார் தெரிவிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இளநிலை பட்டப்படிப்புகளுக்கான **CUET** நுழைவுத்தேர்வு இன்று தொடங்கி சனிக்கிழமை வரை நடைபெறுகிறது.

தில்லியில் உள்ள மையங்களில் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு மட்டும், இந்த நுழைவுத் தேர்வு இம்மாதம் 29ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்வுகள் முகமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெறும் இந்த தேர்வுகள், தில்லியை ஒட்டிய குருகிராம், காஸியாபாத், ஃபரிதாபாத், நொய்டா ஆகிய இடங்களில் நடைபெறும் என்றும், வெளிநாடுகளில் உள்ள மையங்களிலும் இந்த தேர்வு நடைபெறுவதாகவும் அந்த முகமை தெளிவுபடுத்தியுள்ளது.

>>>>><<<<<

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் ஆம் ஆத்மி கட்சியை, குற்றம் சாட்டப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கவிருப்பதாக அமலாக்கத்துறை இயக்ககம், தில்லி உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் உட்பட 3 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒரு அரசியல் கட்சி குற்ற வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கைதாகி சிறையில் உள்ள தில்லியின் முன்னாள் துணை முதலமைச்சர் திரு. மனிஷ் சிசோடியாவின் நீதிமன்றக் காவல் இம்மாதம் 30ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை தில்லி நீதிமன்றம் பிறப்பித்தது.

>>>>><<<<<

தமிழகத்தில், செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் லாரியும் - காரும் மோதிய விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த ஒருவர் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து குறித்து காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

கிழக்கு கடற்கரை சாலை, கல்பாக்கம் அருகே நேரிட்ட மற்றொரு விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

சென்னையை நோக்கி வந்து கொண்டிருந்த கார், சாலையை கடக்க முயன்ற கால்நடைகள் மீது மோதாமல் தவிர்ப்பதற்காக, வாகனத்தை இயக்கியபோது, கட்டுப்பாட்டை இழந்து அருகேயிருந்த மரத்தில்

மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது. இந்த விபத்து குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

>>>>><<<<<

ஆந்திர மாநிலம், பசுமரு கிராமத்தில் இன்று அதிகாலை ஏற்பட்ட சாலை விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர், 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

40 பேர் பயணம் செய்த பேருந்தின் மீது, கனரக வாகனம் ஒன்று மோதியதை அடுத்து இந்த விபத்து ஏற்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள், குண்டூர் அரசு பொதுமருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாக காவல்துறை அதிகாரிகள் கூறினர்.

>>>>><<<<<

சூரியனில் சமீபத்தில் ஏற்பட்ட வெடிப்பை இஸ்ரோவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆதித்யா எல்.1 என்ற விண்கலம் படம் எடுத்து அனுப்பியுள்ளது.

கடந்த வாரம் சனிக்கிழமை சூரியனில் வெடிப்பு ஏற்பட்டது. இது, 20 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற மிகப் பெரிய வெடிப்பாக இருந்தது.

சூரியனின் இயல்பான இயக்கம், அவ்வப்போது மாறி சீற்றம் கொள்ளும். இதனால் சூரிய சூறாவளி, சூரிய ஒளிப்புயல் மற்றும் சூரிய வெடிப்பு ஆகிய மூன்று முக்கிய சீற்றங்கள் ஏற்படும். இந்த சூரிய வெடிப்பின் போது சூரியனின் காந்தப்புயல் பூமியின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும். அப்போது சூரிய காற்று எனப்படும் காந்தப்புலத்துடன் கலந்த மின்னூட்டம் கொண்ட அயனி துகள்களின் வீச்சு அதிகமாக இருக்கும்.

இந்த வெடிப்பை, ஆதித்யா விண்கலம் தெளிவாக படம் எடுத்து அனுப்பியுள்ளது. இதனை இஸ்ரோ தனது சமூகவலைதளப் பக்கத்தில் பதிவு செய்துள்ளது.

>>>>><<<<<

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள், பேட்டரிகள், இரும்பு, சூரியமின் உபகரணங்கள் மற்றும் அலுமினியம் ஆகிய பொருட்களுக்கு கடுமையான இறக்குமதி வரியை அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடன் தலைமையிலான அரசு விதித்துள்ளது.

சீனாவின் முறையற்ற வர்த்தக நடைமுறையை கட்டுப்படுத்தும் விதத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின் வாகனங்களுக்கு 100 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

செமி கண்டக்டர்களுக்கு 50 சதவீதமும், மின் வாகனங்களுக்கான பேட்டரிகளுக்கு 25 சதவீதமும் இறக்குமதி வரி விதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வெள்ளை மாளிகையில் உரையாற்றிய அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடன், சீனாவின் இந்த முறையற்ற வர்த்தக நடைமுறை, அமெரிக்க வர்த்தகத்தை சீர்குலைய செய்யும் என்பதால், அமெரிக்கா இந்த கடுமையான வரிவிதிப்பை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தின், தேனி மாவட்டம், மேகமலை அருவியில் நேற்று திடீரென்று வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதன் காரணமாக, அந்த அருவியில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தேனி, கும்பக்கரை அருவியில் நீர்வரத்து சீராக உள்ளதால், சுற்றுலாப் பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜ்குமார் 45 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

நாட்டின் வடமேற்கு மாநிலங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு வெப்ப அலை வீசும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ராஜஸ்தான், உத்தரபிரதேசம், பஞ்சாப், ஹரியானா ஆகிய மாநிலங்களில் இந்த வெப்பஅலை வீசக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஹாராஷ்ட்ரா மற்றும் கோவாவின் கடலோரப் பகுதிகளில், அதிக வெப்பம் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, மத்தியப்பிரதேசம், சத்திஷ்கர், ஒடிசா மற்றும் குஜராத் மாநிலங்களின் ஒரு சில பகுதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

மேற்குவங்கம், சிக்கிம், அந்தமான் நிகோபார் தீவுகள் ஆகிய இடங்களில் அடுத்த 6 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம், கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா மற்றும் புதுச்சேரியில் வரும் 19ஆம் தேதிவரை மழைக்கு வாய்ப்பிருப்பதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தமிழகத்தில் ராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் இடியுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

குவஹாத்தியில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

ப்ளேஆப் சுற்றிலிருந்து பஞ்சாப் அணி ஏற்கனவே விலகியுள்ள நிலையில், 16 புள்ளிகளை பெற்றுள்ள ராஜஸ்தான் அணியுடன் இன்று விளையாடுகிறது.

ராஜஸ்தான் அணி தற்போது, முதல் நான்கு இடங்களை பிடிக்கும் அணிக்கான ஆட்டத்தில் பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

இந்திய டேபிள் டென்னிஸ் வீராங்கனை மனிக்கா பத்ரா, உலக மகளிர் ஒற்றையர் தரவரிசைப் பட்டியலில் முதல் 25 இடத்தில் 24வது இடத்தை பிடித்து சாதனை படைத்துள்ளார்.

கடந்த வாரம் சவுதியில் நடைபெற்ற போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் அவர் இந்த தரவரிசைப் பட்டியில் இடம் பிடித்துள்ளார்.

2018ஆம் ஆண்டில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் தனி மற்றும் குழுப் பிரிவில் மனிக்கா பத்ரா தங்கப்பதக்கம் வென்றது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<<